[31st March 1969

புதுக்கோட்டை காட்டிலாகா பகுதி

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு உணவு-வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன் —

(அ) புதுக்கோட்டை காட்டிலாகா பகுதியில் காட்டை அழித்து விவசாயப் பண்ணை ஏற்படுத்த ஏதேனும் திட்டமிடப்பட்டதா ?

(இ) இந்த பகுதியில் தேக்கு, யூகலிப்டஸ் முந்திரி பயிரிடப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) குடுமியான் மலையில் அரசு வேளாண்மைப் பண்ணை ஒன்றை ஏற்படுத்துவதற்குத் தொடக்கத்தில் 1,000 ஏக்கர் காட்டு நிலம் மேற் கொள்ளப்பட்டுள்ளது.

(இ) இப்பகுதியில் தேக்கு பயிரிடப்படவில்லை. 273 ஏக்கர் பரப்பில் பலவகை மரங்களும் 5 ஏக்கரில் செம்மரமும் (Red sanders) இப் பகுதியில் வளர்க்கப்பட்டுள்ளன.

Smuggling of Paddy

* 300 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state—

(*a*) whether a lorry smuggling 117 bags of paddy to Kerala on 19th May 1968 had been apprehended within the jurisdiction of the Veerapandi Police Station, in Periyakulam taluk of Madurai district ;

(*b*) whether any prosecution has been launched against the lorry-owner ; and

(*c*) if not, the reasons therefor ?

நெல் கடத்தல்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு உணவு-வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) மதுரை மாவட்ட பெரியகுளம் தாலுகா வீரபாண்டி காவல் நிலைய எல்லையில் 19—5—1968-ஆம் நாள் 117 மூட்டைகள் நெல்லுடன் கேரளாவுக்குக் கடத்தல் செய்த லாரி பிடிபட்டதா ?

(இ) லாரி உரிமையாளர் மீது வழக்குத் தொடரப்பட்டதா ?

(உ) இல்லையெனில் காரணமென்ன ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) ஆம். 17—3—68-ம் தேதி பிடிபட்டன.

(இ) ஆம். லாரி உரிமையாளர், மற்றும் எழுவர் மீதும் தொடரப் பட்ட வழக்கில், அவர்கள் குற்றவாளிகள் அல்ல எனத் தீர்ப்பளித்து, நீதிபதி அவர்களை விடுவித்து விட்டார்.

(உ) கேள்விக்கு இடமில்லை.